பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 பைசா ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 20] சென்னை: ஐப்பசி 11 (27—10—72) வெள்ளி   வெளியூர்: ஐப்பசி 12 (28—10—72) சனி [இதழ்: 111

'ஓட்டுக் காங்கிரசு' ஸ்தாபகர் மீது வழக்கு

அண்ணா பெயரைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு

சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் இராணி அண்ணா மனுத் தாக்கல்

சென்னை, அக். 27—

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை ஒரு கட்சிக்குச் சூட்டியிருப்பதையும், அண்ணா அவர்களின் உருவத்தைத் தக் கட்சிக் கொடியில் பொறித்துப் பயன்படுத்துவதையும் எதிர்த்து திருமதி இராணி அண்ணாதுரை எம்.எல்.சி. அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

சென்னை 6-வது சிட்டி சிவில் கோர்ட்டில் நீதிபதி திரு. சொக்கலிங்கம் முன்னிலையில் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முதல் பிரதிவாதியாகவும், திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி இரண்டாவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு விசாரணை முடியும் வரையில், எம்.ஜி.ஆர். கட்சியின் பெயரில் அண்ணாவின் பெயரைப் பயன்படுத்துவதற்கும் -அந்தக் கட்சிக் கொடியில் அண்ணா உருவம் பொறிப்பதற்கும் தடை விதிக்க வேண்டுமென்று ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு, நவம்பர் 10-ஆம் நாள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருமதி இராணி அண்ணா சார்பில் வழக்கறிஞர்கள் எஸ்.கே. இராசவேலு, ஆர். சண்முகம், நா. கணபதி ஆகியோர் வாதாடுவர்.

திருமதி இராணி அண்ணா அவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளதாவது—:

"மனுதாரர் இராணி அண்ணாதுரை அவர்கள், தேசியத் தலைவரும்—போற்றப்பட்ட அரசியல் கட்சித் தலைவரும் — பொதுமக்களால் 'அண்ணா' என்று அழைக்கப்பட்டவருமான மறைந்த டாக்டர் அண்ணாவின் மனைவி ஆவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய தலைவர் அண்ணா; அவர், கழகத்தின் வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு — கழகத்தை புகழின் உச்சிக்குக் கொண்டு வந்தவர்; 20 ஆண்டுக் காலமாகத் தமிழ்நாட்டில் அரசியல் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த — பிளவுபடாத காங்கிரசைத் — தோற்கடித்துக் கழகத்தை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியவர்!

'தமிழகத்தின் முதலமைச்சர்' என்ற முறையில் மேல் நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அரசியல்—இலக்கியத் துறையில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர்; அவருடைய கண்ணியம் மிக்க செயல்களாலும் — முயற்சிகளாலும் அவர், சர்வதேசத் தலைவரானார்.

அவர் புலமைமிக்கவர்; அவரே ஒரு பல்கலைக் கழகம்; மேலும், இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் 'சிறந்த அரசியல் தலைவர் — தேசியத் தலைவர்' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர்!

இந்திய வரலாற்றில் அவர் பெயர் நிரந்தர இடம் பெற்றுள்ளது!

அவர் முதலமைச்சராக இருந்தபோது திடீரென மரணமடைந்த நேரத்தில், எல்லா அரசியல் கட்சிகளும், இரங்கல் கூட்டங்கள் நடத்தினது, 'அவர் ஒரு தேசியத் தலைவர்' என்பதைத் திட்டவட்டமாக நிரூபித்துக் காட்டுகிறது.

அண்ணாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துச் சென்னைக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில், இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசினார்.

அண்ணாவின் முதலாவது நினைவு நாளில், அவருக்குச் சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டு இந்திய தேசம் அவரைக் கௌரவித்தது.

'அண்ணா' என்ற சொல், நாட்டிலுள்ள — குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவருடைய இதயத்திலும் நிரந்தர இடத்தைப் பெற்றிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் இயக்கம்; அது அண்ணாவிடமிருந்து ஒருபோதும் விலகிச் சென்றது கிடையாது — அவரோடு கழகமும் வளர்ந்தது.

அதே கழகம், முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையில் தொடர்ந்து இயங்கிவருகிறது; வளர்ந்து வரும் இந்தக் கழகத்துக்கு மட்டும்தான், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரைப் பயன்படுத்தும் உரிமை உள்ளது.

வேறு எந்த நிறுவனத்துக்கும் — தி. மு. கழகத்துடன் தொடர்பு இல்லாத வேறு எந்த அமைப்புக்கும் — 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரைப் பயன்படுத்த உரிமை கிடையாது.

அண்ணா தமது கழகத்துக்காகக் கறுப்பு — சிவப்பு வண்ணத்தில் கொடியை உருவாக்கினார்; அந்தக் கொடி, அண்ணா தொடங்கிய கழகத்தின் சின்னம்; கழகம்தான் அந்தக் கொடியைப் பயன்படுத்த உரிமை கொண்டது.

முதல் பிரதிவாதி (எம். ஜி. ஆர்) சென்னையில் தி.மு. கழகத்தின் பொருளாளராக இருந்தார்; அவர், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

1972-ம் ஆண்டு அக்டோபர் மாதத் தொடக்கத்தில், கழகத்தின் விதிமுறைகளுக்கு முரணாக — கழகத்தை முழுக்க முழுக்க அவமதிக்கும் வகையில் — அவர் பொதுக்கூட்டங்களில் பேசினார். தி. மு. கழகம் கடைபிடித்துவந்த ஒழுங்கு முறை — கட்டுப்பாடு காரணமாக அவரைக் கட்சியிலிருந்து 'சஸ்பெண்டு' செய்ய வேண்டி வந்தது.

இந்த நடவடிக்கையால் மனம் நொந்த அவர், புதுக் கட்சி தொடங்க வேண்டும் என்று கருதி, பொதுக்கூட்டங்களில், 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதுக் கட்சியை மனுதாரர் (இராணி அம்மாள்) தலைமையில் தொடங்குவதாக அறிவித்தார்; 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடிபோல், புதிய கட்சியின் கொடி இருக்கும்' என்றும், 'நடுவில் அண்ணாவின் படம் பொறிக்கப்பட்டிருக்கும்' என்றும் தெரிவித்தார்.

இதை மனுதாரர் உடனடியாகக் கண்டித்தார்;—'என் கணவர் தொடங்கிய கழகம் தவிர, 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் உள்ள எந்தக் கட்சியும் யாருக்கும் தெரியாத கட்சி; அந்தக் கட்சிக்கு ஒருபோதும் எனது ஆதரவு கிடைக்காது' என்று அவர் அறிவித்தார்.

1-வது பிரதிவாதி (எம்.ஜி.ஆர்) தனது புதுக் கட்சியைத் தொடங்கி — அதன் அமைப்பாளராக கே. ஏ. கிருஷ்ணசாமியை நியமித்து — புதிய கட்சிக்கு 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரிட்டு— அரசியல் இலாபம் பெற முயற்சி செய்கிறார்.

மேற்கண்ட இரண்டு பேர்களும் தங்களுடைய அரசியல் காரணங்களுக்காகத் தேசியத் தலைவர் அண்ணாவின் பெயரைப் பயன்படுத்துவது திட்டமிட்ட செயல்; கடமை—கண்ணியம் —கட்டுப்பாடு ஆகிய கொள்கைகளை வற்புறுத்தி மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட அண்ணாவின் பெயரைக் கட்சியில் பயன்படுத்துவதும்—படத்தைக் கொடியில் பொறிப்பதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள்—ஆதரவாளர்களின் ஒற்றுமையைக் குலைத்துப் பிளவு ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்படும் செயல்களாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியைப் போன்ற கொடியை—அதுவும் அண்ணா படத்துடன் பயன்படுத்துவது, படிப்பறிவு இல்லாத மக்களை ஏமாற்றவும், சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் செய்யப்படும் திட்டமிட்ட செயலாகும்,

அண்ணாவின் பெயரையும்-படத்தையும் பயன்படுத்துவதன் மூலம் தி. மு. கழகத்துடன் விவாதத்துக்குரிய பிரச்சினையை உருவாக்கியிருப்பதுடன், மறைந்த தலைவரின் பெயருடன் தங்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு அரசியல் இலாபங்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கட்சிப் பெயரிலும்—கொடியிலும் அண்ணாவைப் பயன்படுத்துவதால் அண்ணாவை மதித்து—அவர் கொள்கைப்படி நடக்கும் மக்களிடையே குழப்பத்தை உண்டாக்குகிறார்கள்.

அரசியல் பிரச்சினைகள் எழுந்தாலும் — போராட்டம் நடந்தாலும் — எதிர்க் கட்சி ஆதரவாளர்களின் முதல் செயல், மாற்றுக் கட்சியின் கொடியைக் கிழித்து — அதன் மூலம் எதிர்ப்பைக் காட்டுவது என்பது வழக்கம்.

மழை — புயல் போன்ற இயற்கைக் காரணங்களாலும் கொடிகள் கிழிந்துபோவது உண்டு.

எனவே, கொடியில் அண்ணா படம் இருந்தால், அவருக்கு அவமரியாதையும் — கண்ணியக் குறைவும் ஏற்படுவதோடு, வாதியினுடைய (இராணி அண்ணா) — அவருடைய குடும்பத்தாருடைய உணர்ச்சிகளை ஊனப்படுத்தும்; அண்ணாவை இதயத்தில் வைத்து வணங்கும் பொதுமக்களின் உள்ளத்தையும் பாதிக்கும்.

பிரதிவாதிகளின் இந்தச் செயல், மறைந்த தனது கணவர் டாக்டர் சி. என். அண்ணாதுரையின் கண்ணியம் — மதிப்பு — புகழ் ஆகியவற்றை நிலைநிறுத்[illegible]காக இராணி [illegible]ள்ள உரிமை [illegible]கும்.

இந்[illegible]யில், பிரதிவாதிகள் — [illegible]டைய ஆட்கள் — பிரதிவாதிகள் — வேலைக்காரர்கள் — ஏஜெண்டுகள் அனைவரும் கொடியில் அண்ணா படத்தைப் பயன்படுத்துவது நிறுத்தப்படாவிட்டால், அண்ணா படத்தைப் பயன்படுத்துவது நிறுத்தப்படாவிட்டால், அண்ணாவுக்கும் — அவரது கொள்கைகளுக்கும் மாபெரும் அவமரியாதை ஏற்படும்.

எனவே, மேற்கண்டவர்கள் தங்கள் அரசியல் காரணங்களுக்காக அண்ணாவின் பெயரையோ, படத்தையோ பயன்படுத்துவது சட்ட விரோதம் என்றும், அவற்றை அவர்கள் பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டுமென்றும் மனுதாரர் இந்த வழக்கைத் தொடருகிறார்."

எனவே நீதிமன்றம் கீழ்க்காணும் தீர்ப்புகளை வழங்கவேண்டும் என்று மனுதாரர் வேண்டிக் கொள்கிறார்:—

1. பிரதிவாதிகளும் அவருடைய ஆட்களும், அண்ணா பெயரையும் — படத்தையும் பயன்படுத்த நிரந்தரத் தடைவிதிக்க வேண்டும்.
2. இந்த வழக்குக்கான செலவுத் தொகையைப் பிரதிவாதிகள் ஏற்க வேண்டும்.
3. இந்த வழக்கையொட்டி, மேற்கொண்டு என்னென்ன நிவாரணங்களை அளிக்கலாம் என்று நீதிமன்றம் கருதுகிறதோ, அவைகளையும் வழங்க வேண்டும்."

எழுதத் தெரிவது கட்டாயமாகிறது

சென்னை, அக். 27—

ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ எழுதத் தெரியாத யாரும் இனி (பஸ்—லாரி போன்ற) போக்குவரத்து வாகனங்களின் டிரைவர்களாக முடியாது.

தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் செய்யப்பட்டுள்ள திருத்தம் ஒன்று இவ்வாறு கூறுகிறது; அது இவ்வார அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால், ஏற்கனவே லைசென்சு வைத்திருப்பவர்களை இது பாதிக்காது.

பல்லவா போக்குவரத்து பஸ் தொழிலாளர்கள்

10 சதவீதம் போனசு பெறுவர்

சென்னை, அக். 27—

பல்லவா போக்குவரத்துக் கழகப் பஸ் தொழிலாளர்களுக்கு 10 சதவீதம் போனசு வழங்கப்படுகிறது.

பல்லவா போக்குவரத்துக் கழகப் பொதுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், போக்குவரத்து அமைச்சர் எஸ். இ. ராமச்சந்திரனுடன் கடந்த ஒருவார காலமாகப் போனசுப் பிரச்சினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்; நேற்று உடன்பாடு ஏற்பட்டது; உடன்பாட்டில் உள்ள விவரம் வருமாறு:—

சம்பளம் — அகவிலைப்படி ஆகிய இரண்டையும் இணைத்து அந்த தொகையில் 10 சதவீதம் போனசாக வழங்கப்படும்.

இந்த 10 சதவீதத்தில் 8.33 சதவீதம் போனசாகவும், மீதி 1.66 சதவீதம் போனசு முன்பணமாகவும் வழங்கப்படும்.

இந்த மாதம் 28-ந் தேதிக்குள் போனசுத் தொகை வழங்கப்படும்.

கடந்த ஆண்டு கிடைத்த போனசுத் தொகையைவிட இந்த ஆண்டு ரூ. 60 முதல் ரூ. 200 வரை அதிகம் கிடைக்கும்.

தவறானது — ஆதாரமற்றது !

சென்னை, அக். 27—

"கேரள ஆற்றுத் தண்ணீரை தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிடுவதாகக் கேரள பத்திரிகையில் செய்திகள் வந்துள்ளன. அந்த செய்திகள் தவறானது. முழுக்க முழுக்க ஆதாரமற்றது"

என்று தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறை செயலாளர் பத்மநாபன் நிருபர்களிடம் கூறினர்.

கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க...

வீதிதோறும்—வீடுதோறும் கைத்தறித் துணி விற்பனை

தி. மு. கழக அமைப்பாளர்களுக்குப் பொது[illegible]செயலாளர் வேண்டுகோள்

அக். 29-ல் மேற்கொள்ளவேண்டிய முறைகள் பற்றி விளக்கம்

சென்னை, அக். 26—

"பேரறிஞர் அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முன்பு ஒருமுறை, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளைத் தி. மு. கழக முன்னணித் தலைவர்களும், பொறுப்பாளர்களும் ஊர்தோறும் தெருத் தெருவாய்ச் சென்று விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்க பேருதவி புரிந்தது போன்று, இத்திங்கள் 29-ந் தேதி கைத்தறித் துணிகளைப் பரவலாக விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை ஆங்காங்குள்ள கழக நிர்வாகிகள் பொதுக்குழுவின் தீர்மானத்திற்கேற்ப மேற்கொள்ள வேண்டுகிறோம்!"

என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் சுட்டிக்காட்டி வலியுறுத்தியிருக்கிறார்; மேலும், 'கைத்தறித் துணிகளைப் பரவலாகவும்—ஏராளமாகவும் விற்பனை செய்யக் கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ளுமாறு ஆங்காங்குள்ள கழக அமைப்பினரைக் கேட்டுக் கொள்கிறோம்' என்றும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார், அது வருமாறு:—

1. பெரிய வேன்களிலும், வண்டிகளிலும் கைத்தறித் துணிகளை ஏற்றிக்கொண்டு வீதிதோறும் ஊர்வலமாக சென்று விற்பனை செய்தல்;
2. கைத்தறித் துணிகளைக் கையில் ஏந்திக்கொண்டு வீட்டுக்கு வீடு சென்று வாங்குமாறு கேட்டுக் கொள்ளுதல்;
3. குறிப்பிட்ட முக்கிய இடங்களில் கைத்தறித் துணி விற்பனையாளர்களைக்கொண்டு கைத்தறித் துணிக் கடைகளை நிறுவச் செய்து—பொதுமக்கள் திரண்டு வந்து கைத்தறித் துணிகளைப் பொதுமக்கள் வாங்குவதற்கு வழி செய்தல்;
4. குறிப்பிட்ட நகரங்களில், திட்டமிட்டபடி அமைச்சர்கள்—கழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி—மாநகராட்சித் தலைவர்கள்—உறுப்பினர்கள், கழகச் செயலாளர்கள் ஆகியோர் சேர்ந்து ஆங்காங்கு தனித் தனியாகவும், வேண்டுகோள் விடுத்தும் விற்பனை செய்வதற்குத் துணையாக இருத்தல்;
5. விற்பனை ஊர்வலத்தில் சிறந்த பாடகர்களைக் கொண்டு கைத்தறித் துணி ஆதரவு பாடல்களைப் பாடிப் பொதுமக்களுக்கு ஊக்கமளித்தல்.

கீழ்க்கண்ட விவரப்படி அமைச்சர்களும் பிறரும், கைத்தறித் துணி விற்பனை நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்:—

சேலம்
முதலமைச்சர் கலைஞர்
ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி.
கே. செயராமன் எம்.எல்.ஏ.

மதுரை
அமைச்சர் நாவலர்
மேயர் முத்து எம்.எல்.சி.
காவேரி மணியம் எம்.எல்.ஏ.
இராமகிருட்டினன் எம்.எல்.ஏ.
கு. திருப்பதி எம்.எல்.ஏ.

சென்னை
அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
முரசொலி மாறன் எம்.பி.
வி. முனுசாமி எம்.சி.
மேயர் காமாட்சி செயராமன்
துணைமேயர் என். வி. என். சோமு
நீலநாராயணன் எம்.எல்.சி.
எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.

காஞ்சிபுரம்
அமைச்சர் என். வி. நடராசன்
சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.
சி.வி. இராசகோபால் எம்.எல்.சி.
சே. டி. எஸ். மணி (நகராட்சித் தலைவர்)

கோவை
அமைச்சர் சத்தியவாணிமுத்து
எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி.
பி. சிவசங்கரன் (முன்னாள் எம்.பி.)
அரங்கநாதன் எம்.எல்.ஏ.
மு. இராமநாதன் எம்.எல்.சி.
காட்டூர் கோபால் எம்.எல்.சி.

வேலூர்—ஆரணி
அமைச்சர் ப. உ. சண்முகம்
மா. பா. சாரதி
ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ.
தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ.
தேவராசன் எம்.எல்.சி.

பரமக்குடி—அருப்புக்கோட்டை
அமைச்சர் செ. மாதவன்
எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.
சீறைமீட்டான் எம்.எல்.ஏ.
தங்கபாண்டியன் எம்.எல்.சி.

பொள்ளாச்சி—உடுமலை
அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா
சி. டி. தண்டபாணி எம்.பி.
சண்முகசுந்தரம் எம்.எல்.ஏ.

தஞ்சை—குடந்தை
அமைச்சர் மன்னை நாராயணசாமி
எஸ். நடராசன் எம்.எல்.ஏ.
கோ. சி. மணி எம்.எல்.சி.
கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.

நெல்லை
அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
டாக்டர் பத்மநாபன் எம்.எல்.ஏ.
சூரியநாராயணன் (நகராட்சித் தலைவர்)

திருச்சி—கரூர்
அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்
ஜி. பராங்குசம் எம்.எல்.சி.
த. ப. அழகமுத்து எம்.எல்.ஏ.
எம். எஸ். வெங்கடாசலம்
வி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ.
நல்லுசாமி

தர்மபுரி
அமைச்சர் க. இராசாராம்
ஆர். சின்னசாமி எம்.எல்.ஏ.
எம். வி. கரிவேங்கடம் எம்.எல்.ஏ.

நெய்வேலி
அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்

திண்டுக்கல்
அமைச்சர் ஓ. பி. இராமன்

மேலூர்
பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ.
பி. முத்தசாமி எம்.எல்.ஏ.
மலைச்சாமி

ஈரோடு—திருப்பூர்
அமைச்சர் மு. கண்ணப்பன்
எஸ்.கே.சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
சு. துரைசாமி எம்.எல்.ஏ.
பி. ஏ. சாமிநாதன் எம்.பி.

கோவில்பட்டி
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தூத்துக்குடி
எம். எஸ். சிவசாமி எம்.பி.

செங்கற்பட்டு
இரா. செழியன் எம்.பி.
வி. எஸ். கோவிந்தராசன்
பசுபதி (நகராட்சித் தலைவர்)
செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ.

இராசிபுரம்
நைனாமலை எம்.எல்.ஏ.

நாமக்கல்
மா. முத்துசாமி எம்.பி.
மு. பழனிவேலன் எம்.எல்.ஏ.

மாயவரம்
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
என். கிட்டப்பா எம்.எல்.ஏ.
கிருட்டினமூர்த்தி

புதுக்கோட்டை
கே. வி. சுப்பையா எம்.எல்.ஏ.
வீரையா எம்.பி.
காடுவெட்டி தியாகராசன் எம்.எல்.ஏ.

நாகர்கோயில்
புதுவை முதல்வர் பாரூக்
எம். சி. பாலன் எம்.பி.
இராஜா பிள்ளை எம்.எல்.ஏ.
எம். இராசகோபால்

கடலூர்
ஏ. செல்வராசு எம்.எல்.ஏ.
கோவிந்தராசன் எம்.எல்.ஏ.

விழுப்புரம்
மு. சண்முகம் எம்.எல்.ஏ.

மேலே குறிப்பிட்டுள்ள ஊர்களைத் தவிர, எல்லா இடங்களிலும் அந்தந்த மாவட்ட—வட்ட (சென்னையில் பகுதி) கிளைக்கழக நிர்வாகிகளும், தோழர்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற பேரவை—மேலவை உறுப்பினர்களும், மாநகராட்சி-நகராட்சி தலைவர்களும், உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், துணைத் தலைவர்களும், கழகச் சார்புடைய மன்றங்களின் நிர்வாகிகளும், தோழர்களும் 29—10—72 அன்று கைத்தறி துணிகளை விற்பனை செய்யும் பணிகளில் முனைந்து ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அந்தந்த மாவட்டச் செயலாளர்களும், வட்டக் கழகச் செயலாளர்களும் இதற்கான பணிகளில் முனைந்து ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்."

ஆங்கில அறிவு—வளர்க்கப் புதியதிட்டம்

அமைச்சர் இராசாராம் விளக்கம்

பாண்டிச்சேரி, அக். 26—

"ஐ.ஏ.எஸ். போன்ற அகில இந்தியப் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி தருவதற்காகச் சென்னையில் தொடங்கப்பட்டிருக்கும் நிலையத்தில் சேர முன்வந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கை உற்சாகமளிப்பதாக இல்லை; இந்த ஆண்டு 50 பேர்தான் அதில் சேர்ந்திருக்கிறார்கள்"

என்று தமிழ்நாடு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் இங்கு செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் கூறினார்; அவர் மேலும் கூறியதாவது:—

"8 வகுப்பு முதல் 11-வது வ[illegible] வரை படிக்கும் மாண[illegible] ஆங்கில அறிவை வ[illegible] புதிய திட்டத்தைத் [illegible] அரசாங்கம் புகுத்தியி[illegible] இந்தத் திட்டப்படி, பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 300 மாணவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சென்னைக்கு அழைத்து வரப்படுவார்கள்.

சென்னை நகரில் உள்ள பெரிய நால் நிலையங்களுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதுடன் ஆங்கிலத்தைச் சரியாக எப்படிப் பேசுவது—எழுதுவது என்பது அவர்களுக்குக் கற்றுத் தரப்படும்.

இந்தத் திட்டமானது பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படும்.

இந்தப் பயிற்சி, விடுமுறை காலத்தில் 3 வாரகாலம் அளிக்கப்படும்.

மாணவர்கள் தங்குவதற்கு சென்னை மாநில கல்லூரியில் இட வசதி செய்து தரப்படும்.

வீட்டு வசதித் திட்டம்

சேமிப்பு மூலம் வீடு கட்டும் திட்டத்துக்கு நல்ல ஆதரவு இருக்கிறது; இந்தத் திட்டத்தின் கீழ் வருபவர்களுக்கு வீட்டு வசதி வாரியமும் கடன் வழங்குகிறது."

இந்தப் பேட்டியின்போது புதுச்சேரி முதலமைச்சரும் மாநில தி. மு. க. அமைப்பாளருமான எம். ஓ. எச். பாரூக்கும் உடனிருந்தார்.

பேரறிஞர் அண்ணா மருத்துவச் செலவு — நிதானம் தவறிப் பேசும் எம்.ஜி.ஆர்.

கூற்று — துணைப் பொதுச்செயலாளர் க. இராசாராம் அறிக்கை

'பலகீனத்தால் நிதானம் தவறுகிறார்'

'காலம் கனிந்தால் அண்ணாவையே குறை கூறுவார்'

'செய்த செலவுகள் பற்றி வருமான வரிக் கணக்கில் குறிப்பு இருக்கிறதா?—பதிவேடுகள் ஏதேனும் வைத்திருக்கிறாரா?'

சென்னை, அக். 26—

பேரறிஞர் அண்ணாவின் மருத்துவச் செலவுக்குத் தாம் பணம் செலவழித்ததாக பொதுக்கூட்டம் ஒன்றில் உண்மை நிலையைத் திரித்துக்கூறிப் பேசிய ஒட்டக் காங்கிரசுத் தலைவரின் பலகீன நிலை பற்றித் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும்—பிற்பட்டோர் நலத்துறை அமைச்சருமான க. இராசாராம் அவர்கள் வெளியிட்[illegible]ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:—

"காஞ்சிபுரத்தில் பேசிய எம்.ஜி.ஆர். அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது, தாம் சில செலவுகளைச் செய்ததாகச் செய்தி வெளியிட்டு—அதில் என் பெயரையும் ஏனோ இழுத்துள்ளார்.

அந்தச் செய்தியைச் சொன்ன அவர் ஒரு பயங்கரமான செய்தியைச் சொல்லுவதுபோல் கூறியிருக்கிறார்; அவரது வார்த்தைகள் என்னைத் திடுக்கிட வைத்தன!

கோபத்திலும் ஆத்திரத்திலும் செய்யப்படும் நடவடிக்கைகள், பேசும் பேச்சு அத்தனையும் நிதானம் தவறித்தான் இருக்கும் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய செய்தியை அண்ணாவின் மகனே வந்து சொல்லியதாகவும், அவரைத் தான் நம்பாமல் என்னிடம் பணம் கொடுத்ததாகவும் எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறார்.

இப்போதுதான் அவரது முதல் எண்ணம் வெளிப்படுகிறது; எடுத்த எடுப்பிலேயே அண்ணாவின் மகனை அவர் நம்பவில்லையாம்; காலம் கனிந்தால்—ஒருவேளை தான் அண்ணாவையே நம்பவில்லை என்று கூறுவார் போல் தெரிகிறது!

அவர் புதுக் கட்சியின் தலைவரானதிலிருந்து தி. மு. கழகத்தில் உள்ள அமைச்சர்கள் முதல் கிளைக் கழகச் செயலாளர்கள் வரையில் கணக்குக் கேட்கிறார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தது 1969-ம் ஆண்டு பிப்ரவரி 3-ந் தேதி; எல்லோரையும் கணக்குக் கேட்கும் இவர்—தான் சொல்கிறாரே—அந்தச் செலவு பற்றி 1969-ம் ஆண்டு வருமான வரிக் கணக்கில் குறிப்பிட்டிருக்கிறாரா? ஏதேனும் பதிவேடு இதுபற்றி அவரிடம் உள்ளதா? விவரங்களை வெளியிட முடியுமா?

இதையெல்லாம் அவர் விளக்கமாக வெளியிட்டுவிட்டுப் பின்னர் அவர், மற்றவர்களைக் கணக்குக் கேட்டால் மிகவும் நல்லது என்று நம்புகிறேன்.

கோபத்தில் அவருக்குத் தன் பலகீனம் எதுவும் தெரிவதில்லையே என்பதைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன்."

விலைவாசி உயர்வைத் தடுக்க நடவடிக்கை

நியாயவிலைக்கடைகள் திறக்கப்படும்

முதலமைச்சர் கலைஞர் தகவல்

மாயவரம், அக். 26—

"விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த எண்ணெய், பருப்பு ஆகியவற்றை மலிவு விலையில் விற்பனை செய்ய நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும்—முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"கட்சிப் பூசல் காரணமாக நிர்வாகப் பணிகள் நிலை நின்றுவிட்டது என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்களே?"

பதில்:—"நிர்வாகப் பணிகளுக்கும் இதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை; இதனால் நிர்வாகப் பணிகளுக்கு இது வரையில் எந்தவித இடையூறும் ஏற்படவில்லை; இனியும் ஏற்படாது.

எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியமில்லை

கேள்வி:—"நாம் கூப்பிடும்போது தான் மத்தியப் போலீசு வருகிறது; அதைவிட, நமது மாநிலத்தில் போலீசாரின் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம் ஏதேனும் உண்டா?"

பதில்:—"நாம் கூப்பிட்டுத்தான் மத்தியப் போலீசு வரும் போது, போலீசார் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை; ஆனால், தமிழ்நாட்டில் இப்பொழுதும் 2,000 போலீசார் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்."

தாழ்த்தப்பட்டோர் நலக் கழகம்

கேள்வி:—"கேரளத்தில், தாழ்த்தப்பட்டோர் நலக் கழகம் (கார்ப்பரேஷன்) என்று ஒன்று தொடங்கியிருக்கிறார்களே—அது போல் தமிழ்நாட்டில் தொடங்கும் எண்ணம் உண்டா?"

பதில்:—"அரிசனங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் ஏற்கனவே நாங்கள் செய்து வருகிறோம்; கேரள அரிசன நலக் கழகத்தின் மூலம் அம்மக்களுக்கு எளிய முறையில் நன்மைகள் செய்யத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க முடியுமானால், அதைப் பற்றித் தமிழக அரசு ஆராய்ந்து—அரிசன நலக் கழகம் அமைப்பது பற்றி முடிவு செய்யும்."

மாநிலங்களுக்கு தனித் திட்டக்குழு

தமிழகத்தை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும்

மத்திய அமைச்சர் வலியுறுத்தல்

சென்னை, அக். 25—

சென்னைக்கு வந்திருந்த மத்திய அரசின் திட்ட அமைச்சர் டி. பி. தார், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"தமிழக அரசு அமைத்துள்ள மாநிலத் திட்டக் குழு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது; இதுபோன்ற மாநில திட்டக்குழு ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற திட்டக் குழுக்களில் அதிகாரிகள் தவிர பல்வேறு துறைகளிலும் சிறப்புற்று விளங்குபவர்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மின்சாரப் பற்றுக்குறை தமிழ்நாட்டில் மட்டும் இருக்கவில்லை; இது நாடு முழுவதும் உள்ள பிரச்சினை; மின்சாரப் பற்றுக்குறையைப் போக்கப் பல திட்டங்களை மேற்கொண்டாக வேண்டும்.

நீர் மின்சாரத் திட்டங்களை தவிர அனல் மின் திட்டங்களையும் நிறைவேற்றியாக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கு முக்கிய இடம் தரப்படும்."

பொள்ளாச்சி நகர தி. மு. க.

உறுப்பினர் கூட்ட முடிவு

15—10—72-ல் நடைபெற்ற பொள்ளாச்சி நகர தி. மு. கழக செயற்குழு—பொது உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள்—நகரப் பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்திற்கு திரு. எம். விசயராகவன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நகர செயலாளர் மு. தேவராசனால் முன்மொழியப்பட்டு—துணைச் செயலாளர் இரா. சேரனாலும் வழிமொழியப்பட்டுக் கீழ்க்கண்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது:—

தி. மு. கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழுவில், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக நீக்கி வைத்திருப்பதை இக் கூட்டம் ஒருமனதாக வரவேற்கிறது: அன்றியும் அவரை கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கி வைக்கவேண்டுமெனக் கழகத் தலைவர் பொதுச் செயலாளர் ஆகியோரை இக்கூட்டம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

எல்லா மாநிலங்களிலும் குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டம்

புதுடில்லி, அக். 24—

ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது ஒரு முக்கிய நகரத்திலாவது குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்ற யோசனையை திட்டக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது; இதற்காக நடப்பு ஆண்டில் கூடுதலாக ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கல்கத்தா, பம்பாய், டில்லி, சென்னை, ஐதராபாத், ஆமதாபாத், பெங்களூர், கான்பூர், லக்னோ ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது; இந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்படாத மாநிலங்களில்கூட குறைந்தது ஒரு முக்கிய நகரத்திலாவது இதனைச் செயல்படுத்த வேண்டுமென்று கடந்த ஜூலை மாதத்தில் நடந்த வீடமைப்பு அமைச்சர்களின் மாநாடு பரிந்துரைத்தது; இப்போது இந்த யோசனையைத் திட்டக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர்களில் சிலர், அரசு ஊழியர்களின் வீட்டு வாடகைப் படியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இதைப் பற்றி பரிசீலனை செய்வதாக அமைச்சர் கூறினார்.

கேரளம், மைசூர், ஒரிசா, தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் கிராமப் பகுதிகளிலுள்ள நிலமில்லா ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக சுமார் ரூ. 3.97 கோடி செலவில் 1,50,000 மனைகளை கையகம் செய்வதற்கு இதுவரையில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில் வளர்ச்சி

தமிழ்நாடு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகள்

சென்னை, அக். 26—

தமிழ்நாட்டில் சிறு தொழில்களைத் தொடங்க அனுமதி வழங்குவதைத் துரிதப்படுத்தும் ஒருங்கிணைப்பு அமைப்பாக மாவட்டக் குழுவை நிறுவ மாநில நிர்வாகச் சீர்திருத்த குழு சிபாரிசு செய்திருக்கிறது. கலெக்டர் அதன் தலைவர்; எல்லா மாவட்ட அதிகாரிகளும் அதன் உறுப்பினர்கள் தொழில்துறை துணை இயக்குநர் அதன் செயலாளர்—உறுப்பினர்.

"முன்னேற்றத்தை மதிப்பிட அரசுக்கு உதவ தொழில்துறை இயக்குநர் அடிக்கடி பரிசீலனை நடத்த வேண்டும்; உள்ளாட்சித் துறைகளின் காலதாமதத்தைத் தவிர்க்க மாவட்ட முனிசிபல் சட்டம்—நகர முனிசிபல் சட்டம் ஆகியவற்றைத் திருத்த வேண்டும்; நவீன வளர்ச்சியின் சூழ்நிலையில் காலத்துக்கொவ்வாத நடைமுறைகளை திருத்துதல்—ஆகிய சிபாரிசுகளையும் அது தெரிவித்துள்ளது.

"இந்த சிபாரிசுகளைச் செயல்படுத்தினால், சிறு தொழில்கள் வளரத்தக்க சூழ்நிலையை உண்டாக்க வளர்ச்சி—ஒழுங்கு முறை துறைகளுக்கு உதவும்" என அறிக்கை கூறியது.

குழுவின் சார்பில் உறுப்பினர் திரு. சுப்பையா, சிறு தொழில் பற்றிய அறிக்கையை முதலமைச்சர் கலைஞரிடமும், தொழிலமைச்சர் மாதவனிடமும் தாக்கல் செய்தார்.

நிர்வாகத் தடைகளை நீக்கினால் சிறு தொழில் வளர்ச்சி இன்னும் பிரமாதமாக இருக்கும்—என்பதை குழு நடத்திய ஆய்வு காட்டியதாக அறிக்கை கூறியது.

புதிய தொழில்களை அமைப்பதில் தொழிலதிபர்களுக்குக் கீழ்க்கண்ட முக்கிய சிக்கல்கள் ஏற்படுவதாகக் குழு கூறியது:—

தொழில்துறை—தொழிற்சாலைகள்—நகர திட்டமிடல்—பொது சுகாதாரம்—ஊராட்சிகள் போன்ற பல துறைகளுடன் தொடர்புகொள்ள வேண்டிய நிலை.

இந்த அதிகாரிகளுக்கு உள்ள பத்தாம்பசலிக் கொள்கைகள்.

கள அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்காமல் அனுமதி வழங்கும் அதிகாரம் உயர்மட்டத்தில் இருப்பதால் அசாதாரணக் காலதாமதம் ஏற்படுகிறது.

ஒருங்கிணைப்பின்றி இந்தத் துறைகள் தனியாக செயல்படுகின்றன.

தொழிலதிபர்கள் பல துறைகளை அணுகும்படிச் செய்யாமல் எல்லா அனுமதிகளுக்கும் துணைத் தொழில் இயக்குநரிடம் அவர்கள் மனு கொடுத்தால் போதும் என விதிக்கக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மாயூரத்தில் முதலமைச்சர் கலைஞர்

நகராட்சி வரவேற்பில் கருத்துரை

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

மாயவரம், அக். 26—

முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு மாயவரம் நகராட்சி நேற்று வரவேற்பு அளித்தது.

நகராட்சித் தலைவர் எம். எம். எஸ். அபுல் அசன், அவருக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் பேசுகையில் கூறியதாவது:—

"இங்கு எனக்கு வரவேற்பு அளித்ததற்கு, என்மீதுகொண்ட அன்பு மட்டும் காரணம் அல்ல; அன்பையும் காட்டி—அதன் வழி சில அச்சாரங்களையும் சொல்ல என்னை அழைத்திருக்கிறீர்கள்.

பொதுவாக, நகராட்சிகளில் கட்சியை மறந்த நிலையில் தலைவரும்—உறுப்பினர்களும் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் நிலையாக எழ வேண்டும்.

கட்சியின் பெயரால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும்—கட்சி சார்புகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு—காரியத்தில் திறம்படப் பணியாற்றுவது சாலச் சிறந்ததாகும்.

எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு இதழில், 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று கூறி, சில பிரச்சினைகளை வைத்திருக்கிறீர்கள்; இது மணம் பற்றிய பிரச்சினை அல்ல—பணம் பற்றிய பிரச்சினை.

தமிழ்நாட்டில் சீர்படுத்த வேண்டிய நகராட்சிகளில் மாயவரம் நகராட்சியும் ஒன்றாக இருக்கும் என்ற உறுதியை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்."

முன்னாள் நகராட்சித் தலைவர் ஆர். பழனிசாமி படத்தை முதல்வரும்—கே. சீனிவாசன் படத்தை சட்டமன்ற உறுப்பினர் என். கிட்டப்பாவும் திறந்து வைத்தனர்.

துணைத் தலைவர் வி. தருமலிங்கம் நன்றி கூறினார்.

கல்லூரி வெள்ளி விழா

தருமபுரம் ஆதீனக் கல்லூரி வெள்ளி விழாவில் முதலமைச்சர் கலைஞர் கலந்துகொண்டார்.

தருமபுரம் ஆதீனத் தலைவர் (மடாதிபதி) சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், முதலமைச்சருக்கும்—அமைச்சர் கண்ணப்பனுக்கும் பொன்னாடை போர்த்தினர்.

கல்லூரி வெளி மண்டபத்தில் வெள்ளி விழா குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் கலைஞர், அமைச்சர் கண்ணப்பன், தருமபுரி ஆதீனத் தலைவர் ஆகியோருக்குக் குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்தினர்.

முதலமைச்சருக்கு மகாலிங்கத் தம்பிரான் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

அமைச்சர் கண்ணப்பனுக்குத் தருமபுர ஆதீனத் தமிழ்க் கல்லூரி முதல்வர் வி. எஸ். குருசாமி வரவேற்பிதழ் படித்தளித்தார்.

வெள்ளி விழா மலரை முதலமைச்சர் வெளியிட்டுப் பேசினார்.

அறிஞர் அண்ணா நினைவுத் திருமண மண்டபம்

செம்பனார்கோவிலில் அமைக்கப்படும் 'அறிஞர் அண்ணா நினைவுத் திருமண மண்டப'த்துக்கு முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டினார்.

விழாவுக்கு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி தலைமைதாங்கினார்.

அமைச்சர்கள் சத்தியவாணி முத்து, அன்பில் தர்மலிங்கம், மு. கண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சுப்ரவேலு, சட்டமன்ற உறுப்பினர் சம்பத் ஆகியோர் பேசினர்.

செம்பனார்கோவில் ஒன்றியத் தலைவர் விளநகர் கணேசன் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

காவிரிப் பாலம் திறப்பு

மாயவரம்—கூரைநாட்டில் காவிரி ஆற்றின்மீது ரூ. 3,30,000 செலவில், அஞ்சுகம் [illegible]அம்மையார் பெயரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாலத்தை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

திறப்பு விழாவுக்கு மாயவரம் நகராட்சித் தலைவர் எம். எம். எஸ். அபுல் அசன் தலைமை தாங்கினார்.

திரு. என். கிட்டப்பா எம்.எல்.ஏ. வரவேற்றுப் பேசினார்.

நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் பத்மநாபன் அறிக்கை படித்தார்.

அமைச்சர்கள் சத்தியவாணி முத்து, மன்னை ப. நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

தனியார் துறையில் வருவாய் அதிகரிப்பு

பம்பாய், அக். 27—

1970—71-ம் ஆண்டில் தனியார் துறையில் நல்ல வளர்ச்சி காணப்பட்டதாக ரிசர்வ் பாங்கி அறிக்கை ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

உற்பத்தி—விற்பனை—இலாபம் பெருகியதுடன் அரசின் வரி வருமானமும் உயர்ந்தது.

இந்த ஆண்டில் இவர்களுடைய உற்பத்தி ரூ. 943 கோடியும், மொத்த வருமானம் ரூ. 889 கோடியும் உயர்ந்தன.

மொத்த இலாபம் ரூ. 96 கோடியாக உயர்ந்தது; வரி வருமானம் ரூ. 42 கோடி அதிகமாயிற்று.

சமூக விரோதிகளின் செயல்களை நியாயப்படுத்தும் சந்தர்ப்பவாதிகள்

'மக்கள் கொந்தளிப்பு' என்ற போர்வையில் சனநாயக விரோத நடவடிக்கை

காங்கிரசு -- கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போக்கு -- கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 27—

"தமிழ்நாட்டில் மக்கள் அலை கொதித்தெழுந்திருப்பதாகச் சொல்வதெல்லாம் வெறும் கற்பனை; சமூக விரோதிகள் -- சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு சில எரிச்சல்காரர்களால் நடத்தப்படுகின்ற காலித்தனங்களுக்கும் -- கலவரங்களுக்கும், 'மக்கள் கொந்தளிப்பு' என்ற பெயரைச் சூட்டி மக்கள் மன்றத்தை இழிவுபடுத்துவது நல்லதல்ல"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெளிவுற விளக்கிக் கூறினர்.

தமிழக அமைச்சரவை இராஜினமா செய்யவேண்டும் என்றும், இல்லாவிட்டால் சட்டமன்றத்தைச் சுற்றி முற்றுகைப் போராட்டம் ('கேரோ') நடத்தப்படும் என்றும் தமிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் பற்றி முதலமைச்சரின் கருத்தை நிருபர்கள் கோரினர்; அதற்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

"வன்முறையில் யார் யார் ஈடுபடுகிருர்கள் என்பது எதிர்க் கட்சிககாரர்களுக்கு நன்ருகத் தெரியும். சாலையிலே போகின்ற கார்களையும் -- லாரிகளையும் வழிமறித்து உடைத்தது யார்? அரசாங்கப் பஸ்களுக்குத் தீ வைத்தது யார்? தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர் வேழவேந்தன் காரை அடியோடு கொளுத்தி நாசமாக்கியது யார்? அமைச்சர் மன்னை நாராயணசாமி கலந்து கொண்ட கூட்டத்தில் கல்லெறிந்து அவர் தலையில் காயப்படுத்தியதும் -- அமைச்சர் மாதவனின் காரை நோக்கிக் கல் வீசிக் காரின் கண்ணாடிகளை உடைத்ததும் யார்?

இப்படியெல்லாம் வன்முறையில் ஈடுபட்டிருக்கும்போது கம்யூனிஸ்டுக் கட்சி அதை அறவே மறந்துவிட்டு -- உண்மைக்கு மாருகக் குற்றத்தைத் தி. மு. கழகத்தின்மீதும், சட்ட -- அமைதியைக் காப்பாற்ற முனைகின்ற கழக அரசுமீதும் குற்றம் சுமத்துவது, வேண்டுமென்றே கூறப்படுகின்ற பழிச்சொல் ஆகும்."

கேள்வி:—"கடந்த ஆண்டு நடைபெற்ற மாநிலச் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு முற்போக்கு அணியிலிருந்த கட்சிகள் விலகிவிட்டன என்றும்--தி. மு. கழக அரசு கடைபிடித்துவரும மக்கள் விரோதக் கொள்கை காரணமாக அது மக்களின் ஆதரவு இழந்துவிட்டது என்றும்--எம் ஜி. ஆர். விலக்கப்பட்டதைத் தொடர்ந்து எழுந்துள்ள கிளர்ச்சியை அடுத்துக் கழக அணியினரின் ஆதரவையும் ஆட்சி இழந்துவிட்டதாகவும் கம்யூனிஸ்டுக கட்சி கூறி, இராஜினமா செய்யுமாறு கோருகிறதே -- அதுபற்றி உங்கள் கருத்து என்ன?"

முதல்வர்:—"கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு இந்திரா காங்கிரசு (புது காங்கிரசு)--வலது கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய இரண்டும்தான் தி. மு. கழகத்துடனிருந்த தொடர்பைத் துண்டித்துக் கொண்டன."

"இங்கு நடைபெறுகின்ற சம்பவங்கள் மக்கள் விரோத அரசுக்கு உதாரணம் என்ருல், இந்தியாவில் வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவுடன் இந்திரா காங்கிரசு நடத்தும் பல்வேறு மாநில ஆட்சிகளில் பலமுறை துப்பாக்கிப் பிரயோகங்கள் -- ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள்மீது தடியடிப் பிரயோகம் -- கேரள மாநிலத்தில் அரசியல் கொலைகளே 80-க்கும் மேல் நடைபெற்றிருப்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்திகள் -- உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களில் பயங்கரத் துப்பாக்கிப் பிரயோகங்கள் -- 25 பேருக்கு மேல் பலி -- ஊரடங்குச் சட்டம் -- பஞ்சாபில் நடைபெறுகின்ற மாணவர்கள் கிளர்ச்சி -- அதை அடக்குவதற்கு அந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் -- அசாம் மொழிக் கிளர்ச்சி -- பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற கலவரம் -- பீகார் ஆசிரியர்கள் கிளர்ச்சி--சென்ற வாரம் டில்லியிலேகூட பஸ்கள் கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி ஆகிய சம்பவங்கள் எல்லாம் மக்கள் ஆதரவு அரசுக்கு உதாரணங்களா என்பதை வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் விளக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

"தி. மு. கழகச் சொத்துக் கணக்குகள் பற்றிக் கம்யூனிஸ்டுக் கட்சி தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; ஆனல் அதேநேரத்தில், கேரள முதலமைச்சர் அச்சுத மேனன், அமைச்சர்கள், தங்கள் சொத்துக் கணக்கை முதலமைச்சரிடம் கொடுத்தால் போதும்; பொதுமக்களிடமும் -- சட்டமன்றத்திலும் தெரிவிக்க வேண்டியதில்லை' என்று பதில் கூறியிருப்பதை இங்குள்ள வலது கம்யூனிஸ்டுகள் ஏனே மறந்துவிடுகிருர்கள்."

"தமிழ்நாட்டில் சட்டம் -- ஒழுங்கு -- அமைதி நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்று ஈரோடு பொதுக்கூட்டத்தில் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசியிருப்பதை குறிப்பிட்டுச் செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'கம்யூனிஸ்டுகளுக்குச் சொன்ன பதில சுப்பிரமணியத்திற்கும் பொருந்தும்' என்ருர் முதலமைச்சர்.

கழகத்திடம் மோத வேண்டாம்

ஆதரவாளர்களிடம் தன் கட்சிக் கொள்கையை எடுத்துச் சொல்லட்டும்

'ஒட்டுக் காங்கிரசு' ஸ்தாபகர் பற்றி கழகத் தலைவர் கலைஞர் கருத்து

கேள்வி:—"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எம். ஜி. ஆர். விவகாரம் முடிந்துபோன அத்தியாயம்தானே?" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர்கள் வினவினர்.

முதல்வர்:—"எம். ஜி. ஆரே அதை அறிவித்துவிட்டார்; அவ்வாறு அறிவித்த பிறகும் தி. மு. க.-வுடன் அவர் மோதிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை; தான் ஆரம்பித்துள்ள புதுக் கட்சியின் கொள்கைகளை மக்களுக்குச் சொல்லலாம்.

"இப்போது 'ஸ்தாபன காங்கிரசு' மாணவர்கள் ஏராளமாக அவர்கள் பக்கம் போயிருக்கிருர்கள்; அவர்களை எல்லாம் வைத்துக்கொண்டு, தான் தொடங்கியுள்ள புதுக் கட்சியின் கொள்கைகளை எம். ஜி. ஆர். அந்த மாணவர்களுக்கு விளக்கலாம்; ஏராளமான ஸ்தாபன காங்கிரசு மாணவர்கள் அவரோடு (எம். ஜி ஆரோடு) இருப்பதாக நான் ஏன் சொல்கிறேன் என்ருல், அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஸ்தாபன காங்கிரசு மாணவர்கள் மாநாட்டில் 'தமிழ்நாட்டில் [illegible]வாசி கல்லூரி[illegible] காங்கிரசு மாணவ[illegible] பான்மையினராக[illegible]னர்' என அறி[illegible]கிருர்கள்; இப்போது அங்க கல்லூரிகளில் கிளர்ச்சி நடைபெறுவதைப் பார்க்கும்போது -- அந்த மாணவர்களெல்லாம் எம். ஜி. ஆர். பக்கம் நிற்பதைக் காணும் போதும் ஸ்தாபன காங்கிரசு மாணவர்கள் அவர் பக்கம் இருப்பதை நான் தெரிந்துகொள்ள முடிகிறது.

"ஆகவே அண்ணவின் கொள்கைகளான இந்தி எதிர்ப்பு -- மாநில சுயாட்சி -- தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் போன்றவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதை விட்டுவிட்டும் பிரிந்து வந்த கட்சியைப் பற்றி பேசத் தேவையில்லை; கட்சிக்குக் கட்சி மோதுதல் குறைந்தால்தான் அந்தந்தக் கட்சியின் கொள்கைகளை வளர்க்க ஏதுவாக இருக்கும்."

கேள்வி:—"தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில், எம். ஜி ஆர். பிரச்சினை முடிந்துவிட்ட அத்தியாயம்தானே?"

முதல்வர்:—"அப்படி அவர் (எம். ஜி ஆர்.) சொல்லிவிட்டார்; காஞ்சிபுரத்தில் நான பேசிய பேச்சின் கருத்தும் -- பொதுச்செயலாளரின் கருத்தும் இணைந்து அப்படியே இருக்கின்றன; எம். ஜி. ஆர். விளக்கம் கொடுக்க அளிக்கப்பட்ட 15 நாள் அவகாசம் முடிந்துவிட்ட போதிலும், இறுதி முடிவை எப்போது வேண்டுமானலும் எடுக்கலாம்."

கேள்வி:—"இனி சமரச முயற்சி தேவை இல்லை என்று கழக செயற்குழுவும் --- பொதுக்குழுவும் முடிவு செய்துவிட்ட பிறகு, 'கழகக்' கதவுகள் இன்னும் திறந்திருப்பதாகச் சொல்லுவது எப்படிச் சரியாக இருக்கும்? மேலும், 'இதயத்திலிருந்துஎடுத்து எறிந்துவிட்டேன்' என்று கடற்கரைக கூட்டத்தில் பேசிவிட்ட பிறகு சமரசத்திற்கு வழி இல்லை என்று எம். ஜி. ஆர். கூறுகிருரே?"

முதல்வர்:—"தன் செய்கைக்காக எம். ஜி. ஆர். வருத்தம் தெரிவிப்பாரேயானுல், கழகத்தின் கதவுகள் அவருக்காகத் திறந்திருககும் என்று நான் பொதுச்செயலாளர் அனுமதியோடு -- அவருடைய கருதலையும் இணைத்துச் சொன்னது இன்னும் நிற்கிறது--நீடிக்கிறது.

"இதயத்திலிருந்து எடுத்துவிட்டேன் என்று சொன்னதற்கும்--கட்சியிலிருந்து எடுத்துவிட்டேன் என்று சொல்வதற்கும் வேறுபாடு உண்டு; இதயம் வேறு--கட்சி வேறு."

அமைச்சர்கள் வீட்டில் சோதனையா?

எம். ஜி. ஆர். கூற்றின் இரகசியம் என்ன?

தமிழக அமைச்சர்களின் உறவினர் வீடுகளில் மத்திய அரசின் புலனய்வுத் துறையினர் (சி.பி.ஐ) சோதனைகள் நடத்தியதாகத் தமககுத் தகவல் வந்துள்ளது என்று எம்.ஜி. இராமச்சந்திரன் கூறியிருந்ததை முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவந்து 'அப்படி அமைச்சர்களுடைய உறவினர்கள் வீட்டில் சோதனை நடைபெற்றதா' என்று கேட்டனர்; இதற்கும் பதிலளித்து முதலமைச்சர் கூறியதாவது:—

"அப்படி ஒன்றும் எனக்குத் தகவல் தெரியவில்லை; சோதனையிடுவதாலேயே அந்த வீட்டுக்குக் களங்கம் வந்துவிட்டதாக அர்த்தமல்ல; ஆனுல், சோதனை நடைபெற்று--ஏதாவது குற்றங்கள் கண்டுபிடிக்கப்படடு அதில் அமைச்சர்களோ அல்லது கழகத்தவரோ சம்பந்தப்பட்டிருக்கிருர்கள் என்று நிரூபிக்கப்படுமேயானுல், அவர்கள் யாராக இருந்தாலும், அரசாங்கச் சார்பிலிருந்தாலும் சரி--கழகச் சார்பிலிருந்தாலும் சரி-கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

"எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி எந்த அமைச்சருடைய வீடும் சோதனையிடப்படவில்லை; அவர்களுடைய உறவினர் வீடுகளும் சோதனையிடப்பட்டதாகத் தெரியவில்லை.

"மத்திய புலனுய்வுத் துறை சோதனை நடத்தியது வேறு யாருக்கும் தெரியாமல் எம்.ஜி. ஆருக்கு மட்டும் தெரிந்தது மிகப் பொருத்தமாக உள்ளது; இப்போது மத்திய அரசின் நடவடிக்கை விவரங்களை அறிவிக்கும் பொறுப்பை எம்.ஜி.ஆர். மேற்கொண்டிருக்கிருர் என்பதற்கான இரகசியம் என்னவோ?"

ஆங்கண்ணல் அப்பீல்

கேள்வி:—மத்திய அரசின் ஒரு துறையினர் எடுத்த நடவடிக்கை விளைவாக குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணலுக்கு ரூ. 5,000 அபராதம் விதிக்கப்பட்டதாகச் செய்தி வந்ததே -- இதன் தொடர்பாக அவர்மீது உங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? குடிசை மாற்று வாரியத் தலைமைப் பதவியில் அவர் நீடிக்கிருரா?"

முதல்வர்:— "இந்த வழக்கில் அரங்கண்ணல், தமக்கு அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து அப்பீல் செய்துகொண்டிருக்கிருர்; 'நான் குற்றமற்றவன்' என்று சொல்லி அவர், மேல் முறையீடு செய்துகொண்டிருக்கிருர்; அந்த அப்பீல் முடிவு தெரிந்த பிறகுதான் அரங்கண்ணல்மீது மேல் நடவடிக்கை பற்றி முடிவு செய்யப்படும்."

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

அக். 29 காலை 9-30 மணி: ஈரோடு—கைத்தறித் துணி விற்பனை; மாலை 4-30 மணி: திருப்பூர்—கைத்தறித் துணி விற்பனை.

அக். 30 பிற்பகல் 11-30 மணி: ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு -- ஆனையப்பர் அறநிலைய சார்பில் வரவேற்பு; மாலை 4-மணி: திருச்செந்தூர்—சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வேலவன் விடுதி திறப்பு—சிறு குடில்கள் திறப்பு; மாலை 5-மணி: கடல் அரிப்பு தடுப்புச் சுவர் திட்டம் முதல் கட்ட முடிவு விழா.

அக். 31 காலை 10-30 மணி: திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் திருமண மண்டபம் திறப்பு. பிற்பகல் 2-மணி: மதுரை.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

அக். 29 காலை 9-மணி: கோயம்புத்தூர்—கைத்தறித் துணி விற்பனை; இரவு 7-மணி: பொதுச் கூட்டம்.

அக். 30: காலை 10-மணி: சிவகிரி--வீட்டுமனை வழங்குதல்குறித்து அரிசன நலக் கருத்தரங்கு; மாலை 5-மணி: ஈரோடு — அரிசன மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குதல்; இரவு 7-மணி: ஈரோடு—பொதுக்கூட்டம்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

அக். 29: காலை 10-மணி: பண்ணுருட்டி--கைத்தறி விற்பனை; மாலை 5-மணி: நெய்வேலி—கைத்தறி விற்பனை.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 28: காலை 9-மணி: வி. புதும்பாளையம் (கண்டமங்லம் தொகுதி) — பள்ளிக் கட்டடத் திறப்பு; 10-மணி; அர்ப்பிசியம் பாளையம் — மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு விழாவும், பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவும்; மதியம் 12-மணி: வளவனூர்—ஊராட்சி மன்ற வரவேற்பு—பெரியார் படம் திறப்பு--பழைய மாணவர்கள் சங்கக் கட்டட அடிக்கல் நாட்டுவிழா — பள்ளிக் கட்டடத் திறப்பு -- அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவிழா; மாலை 6-மணி: வளவனூர—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8-மணி: விழுப்புரம்—பொதுமக்கள் வரவேற்பு.

அக். 29 காலை: மதுரை—கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கிவைத்தல்; மாலை: பொதுமக்கள் வரவேற்பு.

அக். 30 காலை: கம்பம்; இரவு 7 மணி: மேலூர்—பொதுமக்கள் வரவேற்பு.

தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ.

நிகழ்ச்சிகள்

அக். 28 மாலை 4-மணி: இராணிப்பேட்டை — நகர தி. மு. க. பொதுஉறுப்பினர் கூட்டம்.

அக். 29 காலை வேலூர்—கைத்தறித் துணி விற்பனையில் கலந்து கொள்ளுதல்; மாலை 6-மணி: கண்ணமங்கலம்—பொதுக்கூட்டம்.

நவ. 1: வாலாசா வட்ட தி. மு. க. கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

நவ. 2: காலை 10-மணி: திருப்பத்தூர் வட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்; மாலை 3-மணி: செங்கம் வட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில கலந்து கொள்ளுதல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] வெளியிடப்படுகிறது.